1059

Registered No. M. 1368

23 NOV 1923

ஓம்

தருமசீலன்.

பத்திராதிபர்: தி. ஆதீநயினர்.

புத்தகம் 6. } உருத்திரோற்காரிஹூ புரட்டாசிமூ 1923-ஹூ செப்டம்பர்மூ { சஞ்சிகை 6.

விஷய சூசிகை.

	விஷயம்.	பக்கம்.
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	... 121
2.	சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்	... 122
3.	கரந்தைத் தமிழ்ச் சங்கம்	... 123
4.	இரகு வம்சம்	... 125
5.	ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா	... 129
6.	கல்வி	... 133
7.	செல்வம்	... 135
8.	அறம்	... 138
9.	இரகஸ்யபுரி மர்மம்	... 143

வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவினோதக்கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களை எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரிஞு புரட்டாசிமீ 1923ஞு செப்டம்பர்மீ	சஞ்சிகை 6.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

சிற்றின்ப நுகர்ச்சியுடன் தரையில் படுப்பதால் தவப்பயன் கைகூடாதெனல்.

"கலைவளர் கிளவி யார்தங் காமர்மென் சேக்கை நீங்கி
இலைவளர் குரம்பை யங்க ணிருநிலஞ் சேக்கை யாக
முலைவள ராகந் தோய முழுவினை முரியு மாயின்
மலைவளர் குரவர்க்கம்மா வினைகளு மாயு மன்றே."

(இ-ள்) (வினை நீங்குவதற்குரிய மெய்த் தவம்புரியாமல், அது நீங்குதற் பொருட்டுச் சிற்றின்ப நுகர்ச்சியோடு காட்டில் வசித்துப் பயனற்ற தவத்தைச் செய்பவர்களே!) "நீங்கள், சிற்றின்ப நூற்பொருள்கள் வளர்கின்ற சொற்களை யுடைய பெண்களின் இன்ப நுகர்ச்சி மிகவும் பொருத்தமான அழகிய மேன்மைச் சேர்ந்த பஞ்சணையை விட்டு நீங்கி வளர்ந்த இலைகளாலே கட்டப்பட்ட குடிசைகளினுள்ளே பெரிய நிலமே படுக்கையாக, அம்மாதர்களின் தனங்கள் விருத்தியடைகின்ற மார்பகம் உடலிற்படும்படி படுத்திருப்பதால் (நீங்கள் நினைத்திருக்கிறபடி) நிறைந்த இருவினைகளும் கெடுமானால், உங்களைப்போலவே இலைக்குடிசைகளில் தரையிலே மனைவியரோடு படுத்திருக்கும் மலையில் வாசஞ்செய்கின்ற வேடர்களுக்கும் வினைகள் நீங்குமல்லவோ?" என்பதாம்.

(வி-ரை) வினைகளை யொழிக்க விரும்புவோர், மாதரின்ப நுகர்ச்சியை அகற்றித் தனியேயிருந்து மனமொடுங்கத் தவஞ்செய்தல் வேண்டும்; அங்ஙனமின்றி மனைவியரோடு காட்டிற்சென்று இலைக்குடிசைகளில் தரையில் படுத்திருப்பதால் மாத்திரம் வினை யொழியாது. இங்ஙனம் செய்வார் தவம் பயனற்றதேயாகும். இவர்களுக்கு இருவினைகளும் நீங்குவதாயிருந்தால் இவர்களைப்போலவே காட்டில் தங்கும் குறவர்களுக்கும் அவை நீங்கவேண்டும். அங்ஙனம் அவ்வேடர்க்கு வினை நீக்கமின்மையால் இவர்க்கு மின்றாம். இது மனைவியரோடு கூடிப்போலித் தவம் செய்து கொண்டிருந்த சில இருடியரை நோக்கி சீவகன் கூறியது. இதனால், வனத்தில் இலைக்குடிசையி லிருப்பதாலும், தரையில் படுப்பதாலும் பயனில்லை யென்பது பெறப்படும்.

கலை-இன்ப நூற்கல்வி; மேகலா பரணமுமாம். கிளவி-சொல். சேக்கை-படுக்கை. குரம்பை-குடிசை.

(சீவகசிந்தாமணி 1432)

தருமசீலன்.

உருத்திரோற்காரிஞூ புரட்டாசிமீ.

"சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்."

இதன் பொருள்:—"சுற்றத்திற்கு-உறவினர்க்கு, அழகு- அழகாவது, சூழ-ஒருவரையொருவர் சூழ, இருத்தல் - ஒருவரோடொருவர் கூடியிருத்தலாம்." என்பதாம்.

பந்துக்களா யிருப்பவர்கள் ஒருவர்மீ தொருவர் விசுவாசமுடையவர்களாய்ச் சுபாசுப காரியங்களில் ஒருவரோ டொருவர் கூடி ஒருவர்க்கொருவர் மிக்க உதவிசெய்து வரவேண்டும். இப்படிச் செய்பவர்களே சுற்றத்தார்களாவர்; இதனாலேயே இவர்களுக்கு உறவினர் என்னும் பெயர் ஏற்பட்டது இத்தகைய சுற்றத்தார்களை யுடையவர்களுக்கு எந்த அரிய பெரிய காரியங்களையும் எளிதில் நிறைவேற்றும் வல்லமையுண்டாகும்; மிக்க சிறப்புண்டாகும்; எதிலும் தளர்ச்சிவாராது; எக்காலத்திலும் அவர்கள் சந்தோஷ முடையவர்களாகவே யிருப்பார்கள். இங்ஙனமின்றி ஒரு செல்வவந்தரிடத்தில், 'நாங்கள் இவருக்குச் சொந்தக் காரர்கள்' என்று கூறிக்கொண்டு அவர் செல்வம் இருக்குமட்டும் அவருடைய வீட்டிலேயே தங்கியிருந்து இஷ்ட போகங்களை யெல்லாம் அனுபவித்து அவருடைய சொத்துக்களை யெல்லாம் நாசஞ்செய்து அவர் வறுமை யடைந்த வுடனே அவரைவிட்டு நீங்கிச் செல்பவரும், இஷ்டப்படி அவர் வீட்டுப்பொருள்களை அனுபவித்துவிட்டு வெளியிற் செல்லு மிடங்களிலெல்லாம், 'எனக்கவர் பந்துவா யிருந்தும் அது செய்யவில்லை, இது செய்யவில்லை என்று அவரைப் பலவாறு நிந்தித்துக் கொண்டு திரிபவர்களும் சரியான சுற்றத்தார்களாக மாட்டார்கள்; விரோதிகளே யாவர். சுற்றத்தாரா யிருப்பவர்கள் தன்னைச் சேர்ந்தவன் ஐசுவரிய முடையவனாயிருந்தாலும், தரித்திரனாயிருந்தாலும் எக்காலத்திலும் அவனை விட்டகலாது சூழ்ந்திருந்து அவனுக்கு மிக்க உதவிகளைச் செய்துவருதலே அவர்க்குரிய கடமையாம். இதை யறிந்தே 'சுற்றத்தார்க்கழகு சூழவிருத்தல்' என்னும் இந்நீதியை ஔவையார் கூறினர். இதனையுணராத சிலர் இக்

காலத்தில் சுயகாரியப் புலிகளாய் ஒரு சுற்றத்தானிடம் சேர்ந்து தங்கள் காரியங்களை மாத்திரம் ஜாக்கிரதையாக முடித்துக் கொண்டு அவன் காரியங்களைக் கெடுத்து அவனுக்கு நஷ்டத்தை யுண்டாக்கி 'அவன் எக்கேடு கெட்டாலென்ன?' என்று அவன் விஷயத்தில் சிறிதும் இரக்கம் காட்டாமல் திரிவர் இவர்கள் மகாநய வஞ்சகராவர். இவர்களுக்கு நற்கதி கிடைக்கமாட்டாது. ஆதலின், ஔவைப் பிராட்டியார் கூறிய இந்நீதியைக் கடைப்பிடித் தொழுகுவோர் இகத்திலும் பரத்திலும் இன்பமே யடைவது நிச்சயம்.

(திருவருட்சகாயம்.)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

பன்னிரண்டாம் ஆண்டுத் திருவிழா.

தஞ்சாவூர்க் கருந்திட்டைக் குடியில் உயர்திருவாளர் இராதாகிருஷ்ணபிள்ளை அவர்களால் சில ஆண்டுகட்கு முன்னர் நிறுவப் பெற்றுச் சீர்த்தியாளர், த. வே. உமாம கேசுவரம்பிள்ளை பி. ஏ. பி. எல்., அவர்களின் தலைமையின் கீழ்நடைப் பெற்றுவரும் தமிழ் சங்கத்தின் பன்னிரண்டாம் ஆண்டுத் திருவிழா, நிகழும் உருத்திரோற்காரி ஆண்டு, புரட்டாசித் திங்கள், கூ-எ, (22, 23—9—23) ஆம் நாட்களில் கருந்திட்டைக் குடிப்பெண்கள் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. அவ்விரண்டு நாட்களிலும், அச்சங்கத்தின் புரவலரும், ஆண்டிப்பட்டிச் சமீன்றாரும், ஆகிய திவான்பகதூர், திருவாளர் சா. ராம. மு. சித. பெத்தாச்சிச் செட்டியார் அவர்கள் M. R. A. S. M. L. C., அவைத் தலைமை யேற்று வீற்றிருந்தார்கள்.

முதல் நாள் பிற்பகல் நான்கு மணிக்கு அவை குழுமிற்று. தொடக்கத்தில் கூடலூர், திரு. வே. இராமசாமி வன்னியர் அவர்கள் கடவுள் வழிபாடு, தமிழ்த்தெய்வ வணக்கம் முதலியன பாடினார்கள். பின்னர் சங்கத்தலைவர் திருவாளர். த. வே. உமா மகேசுவரம்பிள்ளை அவர்களால் வரவேற்புக் கூறப்பட்டது. அதன்மேல் சங்க அமைச்சர். திருவாளர். வெங்கடாசலம்பிள்ளை அவர்களால் ஆண்டின் அறிக்கைப் பத்திரம் படிக்கப்பட்டது. அப்பால் அவைத் தலைவர் முன்னுரையும், மாணவர்க்குப் பரிசளிப்பும் நிகழ்ந்தன; பின்னர் மதுரை. திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் எம்.ஏ. பி.எல். அவர்களால், அனுமான் தூதுவனு என்னும் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதன்மேல் கும்பகோணம் நகர உயர்தரக் கலாசாலைத் தலை

மைத் தமிழாசிரியர் திரு. அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் புலவர் மாண்பு என்னும் சொற்பொழிவை நிகழ்த்தினர்கள். பின்னர், மகிபாலன் பட்டித்தமிழ் புலவர் திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் சுந்தரர் வரலாற்றை விளங்கக் கூறினர்கள். அதன்மேல் அவைத்தலைவர் பின்னுரையும், கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து முதலியனவும் நிகழ்ந்தன. இன்று நிகழ்ச்சிகளின் இடையிடையில் சங்கமாணவர்களின் சொற்பொழிவுகளும், இன்னிசைப் பாடல்களும் நடைபெற்றன. இரவு 10-மணிக்கு அவையின் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

மறுநாள் காலை 8-மணிக்கு மீண்டும் அவை கூடிற்று. அப்போது தமிழ் வளர்ச்சியைப் பற்றியும், சங்க வளர்ச்சியைப் பற்றியும், பல அறிஞர்களால் பல முடிவுகள் கொண்டு வரப்பட்டு அவையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பின்னர் 11-மணிக்கு நிகழ்ச்சிகள் முடிவுபெற்றுத் திரும்பவும் பிற்பகல் 3-மணிக்கு அவை குழுமிற்று. தொடக்கத்தில் முதல் நாளைப்போலவே திருவாளர் வன்னியர் அவர்களால் கடவுள் வழிபாடு, தமிழ்த்தெய்வ வணக்கம் முதலிய பாடப்பெற்றன. பின்னர் திருச்சிராப்பள்ளி திரு. யோசேப்பு கல்லூரி தலைமைத் தமிழாசிரியர். திரு. அ. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் நன்னூல் ஆராய்ச்சியை விளங்க எடுத்துரைத்தார்கள். அதன்மேல் மதுரை திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி.எல். அவர்களால் கம்பர்கவிநயம் கூறப்பட்டது. பின்னர் கோயமுத்தூர் அரசியலார் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர். திரு. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்களால், பாண்டியன் நெடுஞ்செழியனது உயர் தகவுரைக்கப்பட்டது. அப்பால் திருச்சிராப்பள்ளி ஈபுரு கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர். திரு. ந. மு வெங்கடசாமி நாட்டார் அவர்களால் புறநானூற்றின் மேம்பாடு கூறப்பட்டது. பின்னர் அவைத் தலைவர் பின்னுரையும், நன்றிகூறல், கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து முகலியனவும் நிகழ்ந்தன, இன்னும் இடையிடையில் சங்கத்துமாணவர்களின் கட்டுரைகளும், அமுதச்சுவையிசைப் பாடல்களும் நடைபெற்றன. பின்னர் அவையின் நிகழ்ச்சிகள் முடிக்கப்பெற்றன.

இந்த ஆண்டு விழாவிற்கு அவைத் தலைமை யேற்ற தமிழ் வள்ளலாகிய உயர்தக வாளர் செட்டியாரவர்கள் சங்கக்கட்டிடத்திற்கு உதவியாமாறு ஆயிரத்தைந்நூறு ரூபா நன்கொடையளித்ததோடு தங்களிடமிருந்த எட்டுப் பல்லறைப் பேழைகள் (பீரோக்கள்) நிரம்

பிய புத்தகங்களையும், தங்கள் சமஸ்தானப் புலவர் ஒருவரையும் சங்கத்திற் களித்து, அப்புலவர்க்கு மாதந்தோறும் ஐம்பது ரூபா சம்பளம் கொடுத்துவரும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, அடுத்த ஆண்டு முதல் சங்கமாணவர்களில் கல்வியில் முதலாவதாகத் தேர்ச்சி பெறுவோர்க்குத் தங்கப்பதக்கங்கள் நற்பரிசளிப்பதாகவும் வாக்களித்தார்கள். தமிழார் வம்மிகுதியும் குறைந்துவரும் இக்காலத்தில் நற்றகவாளர் செட்டியாரவர்கள் தமிழ்த்தாய் வளர்ச்சியின் பொருட்டுச் செய்த இந்நற்கொடைகள் அறிவின்மிக்கோர் பலராலும் பாராட்டத்தக்கன. தமிழ் நாட்டில் இவர்களைப்போல எத்தனையோ செல்வமுடையாரிருந்தும் தமிழ் வளர்ச்சிக்குதவி புரிவாரைக் காண்பதரிதா யிருக்கின்றது. தமிழ் மக்களிற் சிறந்த பணக்காரரெல்லோருமே இச்சங்க வளர்ச்சியில் சிந்தை செலுத்துவார்களாயின், இது, விரைவில் உயர் நிலைக்கு வந்து நிலவும். அங்ஙனம் பலரும் உதவாவிடினும், திருவாளர் செட்டியாரவர்களைப் போன்ற சில வள்ளல்களால் இச்சங்கமானது ஆண்டுகள் தோறும் வளர்ச்சியில் மிகைப்பட்டு வருதல் குறித்துத் தமிழ்த் தொண்டர்கள் உள்ளம் மகிழ்வார்கள்.

செம்பூர் வீ ஆறுமுகஞ் சேர்வை

இரகு வம்சம்

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-5, பக்கம் 105)

(மூன்றுவது ஸர்க்கம்.)

2[illegible]454

பின்பு இரகுவின் சேனை, தமது காரியம் தடைப்பட்டுப் போனமையால் 'இன்னது செய்வ' தென்றறியாமல் திகைத்துப் போய் அங்கேயே நின்றுவிட்டது. உடனே பிரசித்திபெற்ற மகிமையுடைய 'நந்தினி' என்ற வசிஸ்டருடைய பசுவானது தற்செயலாக அவ்விடம் வந்து சேர்ந்ததும் உடனே நல்லோர்களால் கொண்டாடப்பெற்ற இரகுராஜன் அப்பசுவின் கழுவுநீரா (மூத்திரத்தினு)ல் தனது கண்களை அலம்பிக்கொண்டான். உடனே அவனுடைய கண்களுக்கு மறைவிலுள்ள பொருள்களும் எதிரிலுள்ளவைகள் போலக் காணப்பட்டன. பின்பு இராஜ குமாரனான இரகு, கிழக்கு திக்கில், இந்திரன், தனது தேரில் தனது குதிரையைக் கடிவாள வார்களால் இறுகக்கட்டித் தேர்ப்பாகன் மூலம் அடக்கித் திருடிக் கொண்டு போவதைப் பார்த்தான். உடனே இரகு, இமை கொட்

டாத ஆயிரம் கண்களையும் பச்சைக் குதிரைகளையும் கண்டு தேரி லிருப்பவன், 'இந்திர'னென்று தெரிந்துகொண்டு, கம்பீரமான சப் தத்தினால் அவனைத் திருப்புகின்றவன்போல, அவனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான்.

"ஹே தேவேந்திரா! அறிவாளிகள் யாகத்தில் கொடுக்கும் 'ஹவிஸ்ஸை'ப் புசிப்பவர்களுள் உம்மையே முதல்வனாகக் கூறுகின் றனர். அவ்வாறிருக்க, நீர், எப்பொழுதும் தீக்ஷை செய்துகொண்ட என் தந்தை செய்யப்புகுந்த யாகத்தைக் கொடுப்பதற்கு என் முய ற்சி செய்கிறீர்? மூவுலகத்திற்குத் தலைவனாயும், மறைந்திருக்கும் பொருளையும் பார்க்குந் திறமையுள்ளவராயு மிருக்கும் நீர், யாகத் திற்கு இடையூறு செய்கிறவர்களை எப்பொழுதும் அடக்கவேண்டு மல்லவா? நீரே யாகஞ் செய்கின்றவர்களுக்கு இடையூறு செய்தால், உலகில் நற்கருமம் யாதும் நடைபெறாதன்றோ? ஹே இந்திரனே! ஆகலால் அசுவமேத யாகத்திற்கு முக்கிய ஸாதனமான இந்த அசு வத்தைத் தாங்கள் விட்டுவிடவேண்டும்; நல்வழியைக் காண்பிக் கும் பெரியோர்கள் அவ்வழியில் பிரவேசிப்ப தில்லையே!" என்று சொன்னான்.

இவ்வாறு இராகு சொன்ன வார்த்தைகளைக் கேட்ட இந்திரன் ஆச்சரியமடைந்து, தேரை நிறுத்திவிட்டுப் பதிலும் சொல்லலானான்.

"ஹே! க்ஷத்திரிய குமாரனே நீ சொன்னவை யாவும் உண் மையே; ஆனால் புகழையே பொருளாக மதிக்கும் எம்போன்றவர் கள் பகைவரிடமிருந்து புகழைக் காக்கவேண்டும்; உன் தந்தை உலக முழுவதும் பரவியுள்ள என் புகழை வேள்வியினால் அபஹரி பதற்கு முயற்சி செய்கிறான். எவ்விதம் திருமால் ஒருவரே 'புரு ஷோத்தம' னென்றும் முக்கண்ணன் ஒருவரே 'மஹேசுவர' னென் றும் சொல்லப்படுகிறார்களோ, அவ்விதமே முனிவர்கள் என்னை "சதக்ரது" (நூறு யாகஞ் செய்தவன்) என்று சொல்லுகின்றனர். எங்கள் மூவருக்கும் ஏற்பட்டுள்ள மூன்று பெயரும் மற்றொருவரை அடையாது. ஆதலால் 'கபில' முனிவரைப்போன்ற நான், உன் தந்தையின் குதிரையை அபஹரித்தேன்; நீ இவ்விஷயத்தில் முய ற்சி செய்யவேண்டாம்; ஸகரன் வமிசத்தார் சென்றபாதையில் நீயும் அடிவைக்க வேண்டாம்" என்று சொன்னான்.

பின்பு குதிரையைக் காப்பவனான இராகு, புன்முறுவலுடன் பயமற்றவனாய் மீண்டும் இந்திரனைப்பார்த்து, "பகவானே! குதிரை

யை விடுகிறதில்லையென்பது உமக்கு நிச்சயமாயிருந்தால், யுத்தஞ் செய்வதற்காக ஆயுதத்தை எடுக்கலாம்; நீர் இரகுவை வெல்லாவிடில் 'கிருத கிருத்ய'னாக ஆகமாட்டீர்" என்று சொன்னான். இரகு ஆகாயத்திலிருக்கும் இந்திரனைப் பார்த்து இவ்விதம் சொல்லிவிட்டு, வில்லில் நாணேற்றிவைத்து, காலை மடித்துஉடலை வளைத்துக் குறிபார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் பரமசிவனைப் போலிருந்தான். இரகுவின் சொல்லென்னும் கணையினால் அடிபட்டமனதையுடைய இந்திரனும் கோபமடைந்து, நீருண்ட மேகத்திற்கு க்ஷணநேரம் அடையாளமாயிருக்கும் வில்லில் (தேவதநுஸ்ஸில்) அம்பைத் தொடுத்தனன். பயத்தைக்கொடுக்கும் ராக்ஷஸர்களின் உதிரத்தை வழக்கமாகக் குடித்து வந்திருக்கும் அவ்வம்பானது, அப்பொழுதே இரகுவின் பரந்த மார்பினுள் நுழைந்து, இது வரையில் மனிதன் உதிரத்தைப் பருகிப் பழக்கமில்லாமையினால் சந்தோஷத்துடன் உதிரத்தைப் பருகிற்று.

பின்னர் 'ஷண்முக'க் கடவுளைப்போல் வீரம் பொருந்திய இரகுவும், ஐராவதத்தைத் தட்டிக் கொடுப்பதால் கடினமான விரல்களையும் இந்திராணி கஸ்தூரியினால் எழுதின * மகரிகாபத்திரங்களையும் பெற்றுள்ள இந்திரன் † புஜத்தில் தன்பெயருள்ள அம்பைத் தொடுத்தனன். அன்றியும் இரகு, ராஜன் மயிலிறகுகளையுடைய மற்றொரு அம்பால் இந்திரனுடைய "அசனி"க்கொடியை அறுத்து விட்டான். தேவர்கோன் அப்பொழுது தேவலக்ஷ்மியின் கேசத்தைப் பலாத்காரத்தினால் அறுத்து விட்டதனால் போல, இரகுவிடம் மிகவும் கோபமடைந்தான்.

வெற்றியை விரும்பும் இந்திரனும் இரகுவும் பரஸ்பரம் பறக்கும் ஸர்ப்பம்போல் பயங்கரமான தோற்றத்தை யுடையவைகளும், பூமியையும் ஆகாசத்தையும் நோக்கிச் சொல்லுகின்றவைகளுமான கணைகளால் கோரமாகப் போர்புரிந்தனர். அப்பொழுது தேவர்களும் மனிதர்களும் 'வெற்றி' யாருக்கு வருமோவென்று யோசித்துக் கொண்டிருந்தனர். மேகமானது தன்னிடமிருந்து நழுவின் (இடி) நெருப்பை அவிப்பதற்கு இயலாததுபோல, இந்திரன், இடைவிடாமல் கணைகளை வர்ஷிப்பவனும், வீரம் பொருந்தியவனுமான இரகுவை வெல்லுவதற்குத் திறமையுள்ளவனாகவில்லை.

---

* மகரிகாபத்திரம்=கஸ்தூரி முதலியவற்றால் எழுதின முதலை, அன்னம் முதலிய படிமைகள், † புஜம்=கை.

பின்னர் இரகுவேந்தன் ஹரிசந்தனத்தினால் அடையாளஞ் செய்யப்பெற்ற *ஹரிஹயன் கையில், கலக்கப்பட்ட சடலைப்போல் கம்பீரமாகக் கர்ஜ்ஜித்துக் கொண்டிருக்கும் நாண் கயிற்றை † அர்த்தசந்திர பாணத்தினால் அறுத்து விட்டனன். உடனே இந்திரன் கோபமுற்று, அவ்வில்லை எறிந்துவிட்டு, பகைவனைக் கொல்வதற்காக மலைகளின் இறக்கைகளை அறுப்பதில் வல்லமையுள்ளதும், ஒளிக்கூட்டத்தினால் விளங்குகின்றதுமான (வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான். இரகு, வஜ்ராயுதத்தினால் மார்பினில் நன்கு அடிக்கப்பட்டு சேனைகள் கதரப் பூமியில் விழுந்தான், க்ஷணப்பொழுதிற்கெல்லாம் அவன் அத்துன்பத்தைப் பொருட்படுத்தாமல் சேனைகளின் சந்தோஷ கர்ச்சனையுடன் எழுந்திருந்தனன். அப்பொழுதும் இரகு ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்யத் தொடங்கினன்; இந்திரன் இரகுவின் வீரத்தன்மைக்கு மகிழ்ந்தான் நற்குணங்கள் பகைவரையும் வசியஞ்செய்து விடுகின்றன.

பின்பு இந்திரன் இரகுவைப்பார்தது "ஹே 'இரகுராஜனே, மலைகளிலும் தடையின்றிச் செல்லும் பலமுள்ள எனது வஜ்ராயுதத்தின் அடியை உன்னைத்தவிர எவரும் பொறுத்ததில்லை. ஆதலால் நான் உன்னிடம் திருப்தி யடைந்திருக்கிறேன். குதிரையைத் தவிர உனக்கு வேண்டியதைக் கேள்" என்று சொன்னன். பிறகு இன்சொற்கூறும் இரகுவும் அம்பறாத் தூணியிலிருந்து பாதி எடுபட்டதும், தங்கப்பிடியின் காந்தியினால் விரல்களை விளங்கச் செய்கின்றதுமான பாணத்தைப் பைக்குள் அடக்கி வைத்துவிட்டு, தேவர் தலைவனைப் பார்த்துச் சொல்லலானன்.

"ஹே தேவேந்திரா! நீர் இக்குதிரையைக் கொடுப்பதற்கு விரும்பாவிடில், எப்பொழுதும் தீக்ஷை செய்துகொண்ட என் தந்தை, விதிப்படி 'அசுவமேதயாகம்' செய்து முடித்த பலனை அடைய வேண்டும். உலகத்திற்குத் தலைவரே! ஈசுவரனுடைய அம்சம் பொருந்தி யிருப்பதனல் அடக்க முடியாதவரான என் தந்தை அரண்மனையில் இருக்கின்றார். தாங்கள் தமது தூதரைக்கொண்டே இவ் விஷயத்தை அவருக்கு அறிவிக்கவேண்டும்" என்றனன்! 'மாதலி'யை ஸாரதியாகக்கொண்ட பகவானும் "அவ்வாறே சரி" யென்று வரமளித்துவிட்டு, வந்த வழியே போனன். ஸுதக்ஷிணையின்

* ஹரிஹயன் = இந்திரன்; † அர்த்தசந்திரபாணம் = பிறைச்சந்திரன் போல் வளைந்த கணை.

புதல்வனும் அதிக சந்தோஷமற்றவனுய் அரண்மனைக்குச் சென்றனன்.

இந்திரனது தூதன் மூலமாக இவ்விஷயத்தை யறிந்த இறைவனும் புத்திரன் வந்ததும் சந்தோஷ மிகுதியால் உணர்ச்சியற்றகையினுல் வஜ்ராயுதத்தினுல் அடிபட்டுக் காயமடைந்த இரகுவின் சரீரத்தைத் தடவிக்கொடுத்து மகிழ்ந்தான். மேன்மையான கட்டளையையுடைய காவலன், ஆயுள் குறைந்த பிறகு ஸ்வர்க்கமேற விரும்பி, படிக்கட்டைப்போல, தொண்ணூற்றென்பது அசுவமேத யாகங்களைக் குறைவற முடித்தனன். பின்பு விஷயங்களில் பற்றற்ற திலீபன், விதிப்படி புதல்வனுக்கு ராஜ லக்ஷணமான வெண்குடை, வெண் சாமரங்களைக் கொடுத்து, அபிஷேகஞ்செய்து வைத்து, ஸுதக்ஷிணையோடு கானகஞ்சென்று வானப்ரஸ்தா சிரமத்தை அடைந்தனன். வயது தீர்ந்த இக்ஷ்வாகுவமிசத்து மன்னவர்கள் இவ்வாறு கானகஞ்செல்வது குலவிரதமேயாம்.

(மூன்றுவது ஸர்க்கம் முடிந்தது)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondan, P. O.
(Tanjore Dist.)

ஸ்ரீஜிநாய நம:

ப்ரஶ்நோத்தர மாணிக்யமாலா

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-5, பக்கம்-109.)

13. [illegible]
போ முனீந்த்ர ஆசார்யச்யகே குண:?

ஓ முனீந்த்ரனே ஆசார்யருடைய குணங்களேதுகள்.

[illegible]
[illegible]
பாரகநவ சாவஸ்ஸப பஞ்சா சாராத கேவதகதப ...
குத்தித்தயசம் ஜுத்தா சத்தீசகுணுமு ணெயவ் ...ா.

(இதன்பொருள்.) 12. தபங்கள் அதாவது, அனசனம், ஆவமோதர்யம், வ்ருத்தி பரிசங்கியானம், ரசபரித்யாகம், விவிக்தசய்யாசனம், காயக்லேசம், ப்ராயசித்தம், விநயம், வையாவ்ருத்தியம், ஸ்வாத்யாயம், உத்சர்கம், த்யானம், ஆரு ஆவச்யகக்ரியெ (சாமாயிகம், ப்ரதிக்ரமணம், ப்ரத்யாக்யானம், ஸ்தவனம்)

வந்தனம், காயோத்சர்கம்) ஐந்து ஆசாரம்! (ஞானசாரம், தர்சனசாரம், வீர்யா சாரம், சாரித்ராசாரம், தபாசாரம்) தசதர்மங்கள் (க்ஷமா, மார்தவ, ஆர்ஜவ, சத்ய, சௌச, சம்யம, தப, த்யாக, ஆகிஞ்சின்ன்ய, பிரம்மசர்ய) குப்திகள் (மனோ குப்தி, வசனகுப்தி, காயகுப்தி) இப்படி மேல்சொன்ன தபம் 12; ஆவச்யகிரி யே 6, ஆசாரம் 5, தர்மம் 10, குப்திகள் 3, ஆகமொத்தம் இந்த முப்பத்தாறு குணங்களுள்ளவரே ஆசார்ய பரமேஷ்டிகள்.

19\. ஹொஷ்ஸாமிநு வாஂகஸ்யகெ ஶுணா:?

போஸ்வாமின் பாடகச்யகே குணுஹா?

ஓ சுவாமியே உபாத்தியாயருடைய குணங்களேதுகள்.

ஙயாபஸஂஶஸஹியாஜொ உஶஸவஸுவா ஐணிரவஜெஸஸாஜ

வணவீஸஶுணஸஂஜுத்தா ணாணய ஸ்ஸதஸ்ஸஉவஜ்ஜாயா

ஏயாய சங்கசகியா ஜொத்தச புவ்வா இனிரவசேசாஇ

பணவீச குணசம்ஜுத்தாணு ணயஸ்ஸதஸ்ஸ உவச்சாயா.

(இ-ள்.) 11. அங்கங்கள், (ஆசாராங்கம், சூத்ரக்ரதாங்கம், ஸ்தானுங்கம், சமவாயாங்கம், வ்யாக்யாப்ரக்ஞப்த்தங்க, ஞாத்ருகதாங்க, உபாசகாத்யயனுங்க, அந்தக்ரத்தசாங்க, அனுத்தரோபபாதிகதசாங்க, ப்ரஸ்னவ்யாகரணுங்க, விபாகசூத் ராங்க) 14 பூர்வங்கள் (உத்பாதபூர்வ, அக்ராயணீயபூர்வ, வீர்யானுப்ரவாதபூர்வ, அஸ்திநாஸ்திப்ரவாதபூர்வ, ஞானப்ரவாதபூர்வ, சத்யப்ரவாதபூர்வ, ஆத்மப்ரவாத பூர்வ, கர்மப்ரவாதபூர்வ, ப்ரத்தியாக்யானபூர்வ, வித்யானுவாதபூர்வ, கல்யாண வாதபூர்வ, ப்ராணவாதபூர்வ, க்ரியாவிசாலபூர்வ, த்ரிலோகபிந்துசாரபூர்வ) அங் கம் 11, பூர்வம் 14, ஆகமொத்தம் இந்த இருவத்தைந்தும் தெரிந்தவரோ உபாத் யாய பரமேஷ்டிகள்.

20\. ஹொஶுஜொஸாயொமஶுணா: கியஂத:?

போகுரோ சாதோர்குணுஹ கியம்தஹ?

ஓ குருவர்யரே சாது பரமேஷ்டிகளுடைய குணங்கள் யாது.

வடிவஸ் ஐஂஜியஜொ ஹொஜொவொ சுஙவஸ்ஸயவெஙெ

ணெளணஂ

விஜிஸயணஙெஂதயாவண ஜிஜிஹொயணஙெய ஸுதஂவ.

வதசம இந்தியரோ ஹோலோவோ ஆவச்சயம சேலமண்

[கௌணம்

கிதிசயண மதந்தாவ ணடிதிபோயண மேயபுத்தம்ச.

(இ-ள்.) 5. மகாவிரதங்கள் (ஹிம்சாத்யாக, அசத்யத்யாக, சௌர்யத்யாக, மைதுனத்யாக, பரிக்ரகத்யாக) 5. சமிதிகள் (ஈர்யாசமிதி, பாஷாசமிதி, ஏஷ

ஞசமிதி, ஆதான நிக்ஷேபணசமிதி, உத்சர்கசமிதி) பஞ்சேந்திரிய நிக்ரகம், (ஸ்பர்சன, ரசன, க்ராண, சக்ஷு ஸ்ரோத்ர) 6. ஆவச்யக்ரியைகள் (சாமாபாகம், ப்ரதிக்ரமண, பிரத்யாக்யான, ஸ்தவன, வந்தன, காயோத்சர்க,) கண்மூடி கொள்வது-வஸ்திரம் தரிக்காமலிருப்பது ஸ்னானம் செய்யாமலிருப்பது பூமியின் மேலே படுத்துக்கொள்வது பல் விளக்காமலிருப்பது எழுந்து நின்று ஆகாரம் கொள்வது ஒருதி வசத்துக்கொருதரம் மிதாகாரத்தை வாங்கிக்கொள்வது இந்த பிரகாரம் இருவத்தெட்டு குணங்களுள்ளவர் சாது பரமேஷ்டிகள்.

21. 𑌹𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍𑌦𑍇𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑍇 𑌗𑍁𑌣𑌾𑌃?

போகுரு தேவசித்த பரமாத்மன ஹ கேகுணஹ?

ஓ குருக்களே சித்த பரமேஷ்டியினுடைய குணங்களேதுகள்.

𑌸𑌮𑍍𑌮𑌤𑍍𑌤𑌣𑌾𑌣 𑌦𑌂𑌸𑌣 𑌵𑍀𑌰𑌿𑌯 𑌸𑍁𑌹𑍁𑌮𑌂 𑌤𑌹𑍇𑌵 𑌅𑌵𑌗𑌹𑌣𑌂
𑌅𑌗𑍁𑌰𑍁𑌲𑌹𑍁𑌮𑌵𑍍𑌵𑌾𑌬𑌾𑌹𑌂 𑌅𑌟𑍍𑌠𑌗𑍁𑌣𑌾 𑌹𑍋𑌂𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌣𑌂

சம்மத்தணண தம்சண வீரிய சுகுமத்தஹேவ அவககணம்
அகுருலகு மவ்வாபாகம் அட்டகுண ஹொந்தி சித்தாணம்.

(இ-ள்.) சம்மியக்ஞான, சம்மியக்தர்சன, அனந்த வீர்ய, அனந்தசுக, அவகாகன அகுருலகுத்வ, அலகுத்வ, அவ்வியாபாததே, என்று எட்டு குணங்களுள்ளவர் சித்தபரமேஷ்டிகள்;

22. 𑌹𑍇 𑌦𑍇𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌲𑌯𑍇 𑌕𑌿𑌯𑌤𑍍𑌸𑍌𑌖𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿?
போதேவ சித்த பரமாத்மனஹ சித்தால யெகியத் சௌக்ய மஸ்தி

ஓ சுவாமியே சித்த பரமாத்மனுக்கு எவ்வளவு சுக முண்டாகிறது.

𑌜𑌂 𑌚𑌕𑍍𑌕𑌿𑌫𑌣𑍀𑌸𑍁𑌰𑌿𑌂𑌦𑍇 𑌅𑌹𑌮𑌿𑌂𑌦𑍇 𑌜𑌂 𑌸𑍁𑌹𑌂 𑌤𑌿𑌯𑌾𑌲𑌜𑌯𑌂
𑌤𑌤𑍍𑌤𑍋 𑌅𑌣𑌂𑌤𑌗𑍁𑌣𑌿𑌦𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌣𑌂 𑌖𑌣𑌸𑍁𑌹𑌂 𑌹𑍋𑌦𑌿

சக்கேபணீ சுரிந்தே அகமிந்தே ஜம்சுஹந்தி யாளேயம்
தத்தே அணந்த குணீதம் சித்தாணம் கணம் சுகம் ஹோதி.

(இ-ள்.) சக்ரவர்த்தி, நாகேந்திர, தேவேந்திர, அகமிந்திர இவர்கள் எல்லாருக்கும் த்ரிகாலத்தில் ஆககூடிய சுகத்தினுடைய அனந்தகுண சுகமானது சித்த பரமேஷ்டிக்கு ப்ரதிக்ஷணத்தி லாகுறது.

23. 𑌹𑍇 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌕𑍇 𑌗𑍁𑌰𑌵𑍋 𑌨𑌮𑌸𑍍𑌯𑌾𑌃

பேஸ்வாமின்கே குருவொ நமஸ்யாஹ?

வாருய் ஸ்வாமியே எப்படிபட்ட குருக்களுக்கு நமஸ்காரம் செய்யவேண்டும்.

ஊநஸூ்ர த்ருயஸംவஜொ விநிமூ்ംயுதாய்ா: வஜ
த்ரிதியം

ஊவிவ்ருஶாംதா: ஸூரவெஸிவ்யா வெயுவ்யூஜாவெஸமார
வெ நஜஸூ்யா:

அனர்க்ய ரத்ன த்ரய சர்பதோ பிநிர்க்ரந்த தாயா: பக்ஷபத்
[விதியம்

அபிப்ரசாந்தா: ஸ்பரவைரி வத்வான வதவ்பதாஸ் தேகுர
வோ நமச்பா:

(இ-ள்.) சம்மியக்தரிசன, சம்மியக்ஞான, சம்மியக் சாரித்திரமென்கிற அமௌல்லியமான ரத்னத்ரயங்களென்கிற சம்பத்தையுடையவராயும், அத்தியந்த பரிக்ரக ரகிதராயும், சாந்தராயும், வைரியான மன்மதனுடைய பக்ஷிக்கு விதவையை செய்யக் கூடியவராயும் இருக்கிறரோ அவரே வந்தனைக்கி யோக்கியரான குருக்களாகிறார்.

24 ஹொமாரெஜவ யஜூஸ்யகிம் லக்ஷணம் ?

சுவாமி தர்மமென்றால் என்ன.

யுஜ்ஜோவத்யூஸஹாவொ ஜீவംமாணം வரவ்வணംயுஜ்ஜோ
ரயணத்யംவயுஜ்ஜோ உத்தவஜாஜிஜமவிஹொ யுஜ்ஜோ

தம்மோ வத்து ஸஹாவோ ஜீவம் காணம் சரக்கணம் தம்மோ
ரயணத்த யஞ்சதம்மோ உத்தமக மாதிதசவி கோதம்மோ.

(இ-ள்.) தர்மம் என்றால் வஸ்துஸ்வபாவம் சம்மியக் தரிசன, சம்மியக் ஞான, சம்மியக் சாரித்திரங்களென்கிற ரத்னத்ரயங்கள் தர்மம், இன்னும், உத்தமக்ஷமா, மார்தவ, ஆர்ஜவ, சத்ய சௌச, சம்யம, தப, த்யாக, ஆகிஞ்சின்னிய, பிரம்மசர்ய இதுகளேத்தான் தர்மம் என்று சொல்லுகிறது. (அகிம்ச ரத்னத்ரய, உத்தமக்ஷமாதி தசலட்சண-தர்ம. இதுகள் எல்லாம் ஆத்மன் சுபாவங்களாகவே இருக்கிறது.

இன்னும் வரும்.

விருதூர். திரு. அப்பாண்டை நயினர்

அனந்தபுறம் ஸ்கூல்டீச்சர்,

ஜாகீர் ஆரணி.

ஸ்ரீ-விஷ்ணு-வித்யே.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6. சஞ்சிகை-5. பக்கம்-115.)

6. சம்சாரமானது துக்ககரமானதென்றும் சம்சாரத்தில் ஆசக்தனாதவதினாலே எவ்வளவுக் கெவ்வளவு கர்மபந்தமாகிறதென்பதும் நம்ம தர்ம கிரந்தங்கள் போதித்திருந்த போதிலும் ஜீவாத்மன் சம்சாரத்திலேயே ஆனந்தப்படுகிறான். இதற்கு பெண்ஜாதி மக்கள் மோகபாசமானது. நானாவிதமான விஷயோப யோகங்கள் இது முதலானதுகள் முக்கியமான காரணங்கள் நாம் நன்றாய் பரிசிலனை செய்து பார்த்தால், இந்த இரண்டு காரணங்களி னின்றும் ஜீவாத்மனுக்கு, கொஞ்சமாவது சுகம் கிடைக்காமல், அதுகளி னின்றும் ஆனால் கேவலம் தன்னுடைய நாசத்துக்கே மாத்திரம் பாத்ரமாகிறது. ஏதாவதொரு பக்ஷி வந்து சமீபத்தில் வந்து புற்றென்று ஓடி மற்றொரு கிளையை ஆச்ரயிப்பதுபோல பெண்ஜாதி பிள்ளைகள் சுகசம்பத்து ஆனை, குதிரை, தனதான்ய முதலான பரிக்ரகங்களெல்லாம் அடைந்தாலும் க்ஷண மாத்திரத்திலே நாசமாகக்கூடிய உடைமைகள், சாராசார விசார சக்தியானது, மனுஷ்யப்ராணிகளிடத்திலேயே இருப்பதனாலே சம்சாரபந்தத்தை நிராகரிப்பது மனுஷ்ய ஜென்மத்திலாகுவதல்லாமல் வேறெ எந்த ஜென்மத்திலேயும் ஆக மாட்டாது மனுஷ்ய னென்றால் பசு பக்ஷி முதலான திர்யஞ்சப்ராணிகளுக்கு ஆகார நித்ரை பய விஷயாபிலாஷ முதலானதுகள் உண்டு ஆனால் மனுஷ்யனிடத்திலே தர்மமென்கிறதென்று விசேஷமான பாவனை வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அது காரணத்தினாலே, மனிதன் தர்மத்தை அவலம்பித்து நடப்பது அவசியம். அப்படி நடக்காவிட்டால் அவனுக்கு நரபசு என்று சொல்வதற்கு அட்டி என்ன?

7. நம்ம உன்னதியாகட்டும் தாழ்வாகட்டும் நம்மையே அவலம் பித்திருப்பதென்பதை நாம் என்றைக்கும் மறக்கக்கூடாது. ஆத்ம ஹிதத்தை சாதிக்க வேண்டுமானால் நாம் சம்சாரத்தின் மேலிருக்கிற மோகத்தை நாசம் செய்து நம்ம சாரித்திரத்தை சுதாரிக்க வேண்டியதாய் இருக்கிறது. ஏனென்றால் பாரமார்த்திக விஷயங்களில் ஆசக்தனாதவதே விஷய நிவ்ருத்திக்கு சுலப உபாயம் நம்ம பாரமார்த்திக உன்னதி ஆகவேண்டுமானால் நாம் ஆத்மசிந்தனையை செய்வது அத்திய வசியமானது. வ்யவகார நயத்தினாலே பரிசிலனைச் செய்து பார்த்தால் சம்யக்தரிசன (நற்காக்ஷி) சம்யக்ஞான

(நன்ஞானம்) சம்மியக் சாரித்ர (நல்லொழுக்கம்) ரத்னத்ரயமே ஆத்மோன்னதிக்கு சாதனம் ஆனல் நிச்ச நயத்தினலே ஆத்மன் ரத்னத்யத்தினலே கூடி யிருப்பதினலும் ஆத்மத்யானமே ஆத்மோன்னதிக்கு காரணம். இதன் கருத்தாவது சுத்தாத்மனுடைய சிந்தனையினலே ஆத்ம சுத்தியாகிறது. பாரமார்த்திக நித்திய சுகத்தை சாதிப்பதே ப்ரதியொரு மனுஷ்யனுடைய நிஜமான கர்த்தவ்யமா யிருப்பதினல் தன்னுடைய ஹிதமானது. என்ன செய்தால் ஆகக்கூடுமென்பதை நிர்ணயம் செய்வதினலே முதல் அது இகலோகத்தில் சாராசார வஸ்துக்கள் யாவதென்பதை நிச்சயிக்கவேண்டும். பிறகு நாம் அசார (அனித்ய) வஸ்துக்களின்மேல் யிருக்கிற மோகத்தை விட்டு சார (நித்ய) வஸ்துக்களின் பிராப்திக்காக எத்தனிக்கவேண்டும். ஆத்மனுடைய கல்யாணமாக வேண்டுமென்று நம்ம அபிலாஷை இருந்தால் நாம் இந்த தேகத்தின் மேலிருக்கிற மமத்வ புத்தியை விட்டு விட்டு ஆத்மதயானத்தில் பொருந்தியவனக ஆகவேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் சில வேளையாவது, எல்லா ப்ரபஞ்சிக விசாரங்களில், அப்ரசனகி (பிரவேசிக்காமல்) பரமாத்மனுடைய, நித்தியானந்தத்தை, செய்யவேண்டும். மனே நிக்ரகம் இல்லாமல் ஆத்மத்யானமாக மாட்டாது. ஆத்மத்யான மில்லாமல் சாஸ்வத பரமானந்த சுகமானது, நமக்கு கிடைக்காது அது காரணத்தினலே அனந்த ஞானிகளும், சகல தோஷத்தினலே ரகிதமானவர்களும், பூர்வாபரவிரோத ரகிதமான, விரோதத்தை செய்பவராயும், சன்மார்க்கத்தை காண்பிப்பவராயுமிருக்கிற ஸ்ரீ ஜினெஸ்வரனிடத்தில் முதல் முதல் சலனமில்லாத ச்ரத்தத்தையை வைத்து சம்மியக் ஞானத்தினலே பரிபூரிதனகி சுதாரித்துக் கொண்டால் நம்ம ஆத்ம கல்யாணமாகி நமக்கு சத்கதி கிடைப்பது நிச்சயம்.

8. கொலை, பொய், களவு, காம, பரிகிரக, என்கிற பாப கர்மங்களை விட்டு, சுத்த வ்ரதநியினலே நடந்தால் ப்ரதியொரு மனுஷ்யனுக்கு ஹிதமாகிறது, தயாரஹித்தன், லோபி, பரதன, ப்ரஸ்ரீயினிடத்தில் ஆசக்தனயிருக்குற மனுஷ்யனுடைய, மனசு, எப்பொழுதும், சுத்த மடைவதில்லை. ஏனென்றல், இந்த பாபவாசனைகளுக்கு மனுஷ்யன், ஒருவேளை சுவாதீன பட்டானென்றல் அவன் சாராயம் குடித்தவனுக்கு மேலாக கேட்டை விளைவிக்கிறது.

ஸ்லோகः

நமெவொமஹ்யாதுஶம் ஹாஹ்யம் நமெவொயாஷிவஶம் ஷைவம்
ஷஹமநாநாஷிவஶஷ்லாது நஷஂஷாநாது ஶொர்ஷிவः

சம்சாரத்தினின்றும் நீங்கி தபச்சரணம் ஆத்மசிந்தனை செய்வது மிஞ்சின சம்பத்தில்லை, ஞானத்திற்கு மீஞ்சின சுகமில்லை கடவுளை காட்டிலும் வேறே ரக்ஷகனில்லை சம்சாரத்து மிஞ்சின சத்துரு வில்லை.

இன்னும் தொடரும்.

விருதூர். திரு. அப்பாண்டை நயினர்.
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்
ஜாகீர் ஆரணி.

செல்வம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-6, பக்கம்-117.)

மேலும், கல்வி, தருமம், இன்பம், அறிவு, கீர்த்தி. உறவு, நினைத்ததை முடிக்கல் இவ்வெற்றிகளை ஒருங்கே அடைந்து இன்பத்தை அனுபவிப்பவர்கள் செல்வர்களேயாம்.

இன்னும்,

"திரவியந்தானே புத்தி திரவியந்தானே வித்தை
திரவியந்தானே சத்தம் திரவியந்தானே சித்தி
திரவியந்தானே சத்தி திரவியந்தானே முத்தி
திரவியந்தானே யாது செய்வதல்லாதும் உண்டோ"

என்னும் பாவால் செல்வத்தின் மாட்சியை கவனிக்கத் தக்கது.

அன்றியும் திரிலோகத்திலும் இந்நிதி யில்லாதவர்க்கு எல்லாம் பாழாகுமேயன்றி வேறல்ல.

"சுதியிலார் பாட்டும் தங்கள் சுற்றமில்லாத நாடும்
மதியிலார் கவியும், நல்ல மனைவியில்லாத வீடும்
பதியிலா ரழகும்பாழே பார்க்கில் இங்கிவைபோல் அல்ல
நிதியிலார்க்கெவையும் பாழே, நினைக்கும் மூவுலகினுள்ளும்"

என்ற நீதியை நோக்கத்தக்கது.

எவ்வாறு சூரியன் இல்லாவிடின் எல்லாம் மறைந்துக் கண்ணுக்குத் தெரியாது போகிறதோ! அவ்வாறே இப்பொருளில்லாதவர்பால் மானம், அறிவு, ஆண்மை முதலியயாவும் மறைந்து போகும்.

"கதிரவன் இலையேல், கண்ணிற் காண்பன மறையுமாபோல்
நிதியுமொன்றிலையேல், யாவர்க்கும் நீதிமா ஞானம்போதம்
துதிபெருங் கீர்த்தி ஆண்மைசூழ்ச்சி மந்திரவிசாரம்
சதுரயிமான மெல்லாம் தன்னிலே மறைந்து போமால்"

என்னும் ஆன்றோர் பாடல் என் நினைவுக்கு வருகின்றது.

இன்னும், இப்பொருளில்லாதவர்கட்கு கைகால்கள் சோர்ந்து, உள்ளங்கலங்கி, மெய்நடுங்கி, வாய்குளறி, அறிவு கெட்டுத்தவிப்பர். ஈண்டு நளன், அரிச்சந்திரன் இவர்களைக் கவனிக்கத்தக்கது.

"வறுமையாலே யாசிக்கவருமவர் தமக்கும் ஆவி
இறுமவர் தமக்கும், செய்யும் இயற்கை ஒன்றும், ஏதென்னில்
உறுதிபோம் கைகால்சோரும் உள்ளமுங்கலங்கும் மெய்யும்
குறுகியே நடுங்கும் வாயுங்குழறும் நல்லறிவும் போமே"

என்ற பஞ்சதந்திரபாடலை உற்று நோக்குமின்.

வறுமை யுடையவனிடத்தில் நோய்வந்தடையும், நல்லொழுக்கத்தினின்றுந்தள்ளும், தீய ஒழுக்கத்தைக் கைகொள்ளச் செய்யும் திருடத்தூண்டும், பொய் பேசும்படி பழக்கும், சோம்பலைப்பயக்கும், கொலை செய்யுமாறு வற்புறுத்தும், பிச்சை யெடுக்குமாறு ஓட்டை எடுத்துக் கையிற்கொடுக்கும்.

"தரித்திரம் மிக்கவன்பிணை யொடுக்கச்
சரீரத்தை யுலர்தரவாட்டும்
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும்
சாற்றரு மூலோபத்தை மிடுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தகும்பரங்கலாம் பலவிளைக்கும்
தரித்திர மவமானம் பொய்பேராசை
தருமிதிற் கொடிய தொன்றிலையே"

"பல்லெலாந் தெரியக்காட்டி. பருவரல் முகத்தில் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலாமகல வோட்டி, மானமென்பதனை வீட்டி
இல்லெலா மிரந்தலந்தோ! இழிவிழிவெந்த ஞான்றும்"

என்று மேலோர்கள் கூறினார்கள்.

அன்றியும்;

"பணமில்லாதவர் நடைப் பிணமாவர்"
"கொடிது கொடிது வறுமை கொடிது"
"இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்
"வித்தைக்குச் சத்துரு விசனமுந்தரித்திரமும்"
"தரித்திரங்களிப் பாங்கடலுக் கோர்வடவை
சாற்று மெண்ணங் கள்வாழிடமாந்
தரித்திரம் பற்பறுக்கு முந்தோன்றத்
தக்கபேரா காமென்ப

தரித்திரநன்மை சாலொழுங் கென்னும்
தழைவளந்தனக் கழறழலாந்
தரித்திரங் கொடியவெ வற்றினுங் கொடிதத்
தகையதை யொழித்த னன்றுமே"

வறுமையால் உண்டாகும் இக்கொடிய கஷ்ட நிஷ்டூரங்களை இப்பழமொழிகளா லறிக.

வறியவன் நீதி நியாயவழிகளில் தன் அபிப்பிராயத்தை உண்மையாகச் செப்பினும்; ஜனங்கள் அதை நம்பமாட்டார்கள். இது சகஜம் ஆனால் செல்வன் ஓர் விஷயத்தைப்பற்றி பொய் சொன்ன போதிலும், ஜனங்களுக்கு அது நியாயமாகத் தோற்றும், அவனை யாவரும் சத்தியவந்தன் என்று நினைப்பார்கள்.

வறியவன் ஜனங்களிடத்து இனிமையாகப் பேசினும் அவனை அவர்கள் நாடமாட்டார்கள். ஆனால் செல்வன் அவர்களை கடுஞ் சொற்களால் கோபித்தாலும் அவனையே நாடுவார்கள்.

"இன்சொல்லன்றுழ் நடையனுயினு மொன்றில்லானேல்
வன்சொல்லி னல்லாது வாய்திரவா—என்சொலினும்
கைதுடையான் காற்கீழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடையவல்லபிற." இதுதானு?

செல்வர்கள் எண்ணின இடம் இப்பொருள் போய் அன்னவர்கள் பகைமைத் தீர்த்துவைக்கும்; இஃது "பொருளென்னும் பொய்யா விளக்கு மிருளறுக்கு மெண்ணிய தேயத்துச்சென்று" என்னுங் குறள் வெண்பாவைச் சிந்தித்துப் பாருங்கள்.

"பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்
"எட்டிஎட்டின வரைபாயும், பணம் பாதாளம் வரைபாயும்
"Money makes many things"
"செல்வரை யெல்லாருஞ் செய்வர்சிறப்பு"
"பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும், பொருளல்லதில்லை பொருள்"
"பொருளே நட்பு"
"செல்வம் சுகத்திற்கு வித்தாம்"
"பணந்தானே அறிவாகும் பணந்தானே
வித்தையுடாம் பரிந்துதேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா
தவர் பிணமாம், பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்கும் தண்டலை நீள்
நெறியாரே பாரின்மீது
பணந்தானே பந்தியுறும் குலங்கீழாங்
குப்பையிலே பழுங்குந்தானே"

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரியதில்"

என்ற இம்மூது மொழிகளால் செல்வம் மானிடர்களாகிய நமக்கு இன்றியமையாதது என்பதை; நான் சொல்லாதே நன்கு விளங்கா நிற்கும்; இனி பொருளீட்டும் நெறிகளையும், அப் பொருளைக்கொண்டு நாம் செய்யவேண்டிய கடமையும் பின் ஆராய்வோம்.

(வளரும்)

கூறைநாடு எஸ் என். இராமு.

உ

கடவுள் துணை.

அறம்.

கரைகாண அரிய பிறவியாகிய பெருங்கடலிலே புகுந்தோர் அதனைத்தப்பி மக்கள்யாக்கையை அடைதல் மிகவும் அரிது.

"பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுட்
டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதால்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே"

எனப் பெரியாருங் கூறினர்.

அந்த அரும்பெரு மக்கள்யாக்கையும் கானவர், குறுப்பர் இடம் நீங்கித் தீம்புனல் நாட்டிலே நல்ல தொல்குலத்திலே அருளும் அறமும் உடையராய்ப் பிறத்தல் அதனினும் மிக அரிது. ஆதலின், இங்ஙனம் அரிதின் அடைந்த மக்கள்யாக்கையால் அடைய வேண்டிய பயனைக் காலநீட்டிப் பின்றி அவ்வுடம்பு உள்ள பொழுதே பெறல் வேண்டும்;

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் காவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை"

"மின்னின் நிலையில மன்னுயி ரியாக்கை"
"இளமையு நில்லா யாக்கையு நில்லா"

என வருவன காண்க.

இனி, அம்மக்களுடம்பால் அடையக்கடவ பயனாவது அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு. அவற்றுள் :—

அறமோ, இல்லறம், துறவறம் என இரு பகுதியினை யுடையது. இல்லறமாவது,—கற்புடை மனைவியோடும் கூடி இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று ஆதுலர் முதலாயினாரை அன்புடன் உபசரித்து அருளுடையவராய் வாழ்தல். துறவறமாவது,—இல்லறத்தில் வழுவாது ஒழுகி, அறிவுடையவராய்ப் பிறப்புக்குப் பயந்து மோட்சத்தை விரும்பி, அகப்பற்றுப் புறப்பற்றுக்களை நீக்கி, பசிபிணி முதலியவற்றைச் சகித்துக் கானகம் நண்ணிக் கடுந்தவம் இயற்றல்.

பொருளோ கல்வி, செல்வம் என்ற இருபகுதியதாகும். அவற்றுள், கல்வி,—இது, பலதிறப்படினும், கற்கப்படுவனவாகிய அறிவு பயக்கும் நூல்களைக் கற்று, கற்றவழியிலே அதற்குத் தகநிற்றல்.

"அலகுசால் கற்பினும் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவது எல்லாம்—கலகலக்
கூஉம் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒம் துணையறிவார் இல்"

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனவரும் முன்னோர் மொழிகளால் இஃது அறியப்படும். செல்வம்,—அற நெறியிலேயே ஈட்டி அத்துறையிலேயே செலவிடுவது. இது,

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

எனவரும் வாயுறை வாழ்த்தால் வகுத்துணரப்படும்.

இன்பமோ தானும், தனது மனவியும் மனம் ஒத்து நுகரும் சிற்றின்பத்தால் ஒருவனுக்கு அவனது அறிவு, ஆராய்ச்சிகளின் அளவிற்கேற்ப அவனது மனத்தே தோன்றுவது. இது பிறருக்கும் அளவிளதன்று.

வீடாகிய மோட்சமோ மனமும், மொழியும் செல்லா நிலைமைத்தாய் நீங்காத இன்பத்தை இடைவிடாது நுகரும் இடம்.

இந்த நாற்பெரும் பேறுகளும் ஒன்றுக்கொன்று காரணகாரியமாக நிகழ்தலின், ஒன்றின்றி மற்றவை பொருந்தாவாம். ஆதலின், எல்லாவற்றையும் அளிக்கும் ஆற்றலினையுடைய அறத்தை ஒவ்வொருவரும் முதலிற் கைக்கொள்ளல் வேண்டும்.

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

"அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூஉங் கில்லை கேடு"

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்பன இதனை வலியுறுத்தும். இனி, அறஞ் செய்வதைப்பற்றிச் சிறிது விரிப்பது பொருத்தமானது.

அறம்,—அனைத்து ஜீவகோடிகளிடத்திலும் அருளுடையவனாகவும், பிறர்க்குக்கேடு உண்டாவதற்குற்ற காரணங்கள் ஏதும் தன்னிடத்தில் இல்லாதவனாகவும், பரிசுத்தமனத்தினனாகவும் இருந்து செய்யப்பட வேண்டியதாகின்றது. இங்கே,

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

என்ற அருமைத் திருவாக்கு ஆராயத்தக்கது. இனி,

அழுக்காறு—பிறரது ஆக்கம் கண்ட இடத்து மனம் புழுங்கிப் பொறாமை கொள்ளுதல். அது, தான் தோன்றிய பொழுதே தன்னை உடையவனைக் காலந்தாழ்த்தாது கெடுப்பதோடு அவனது சுற்றத்தாரையும் கெடுத்துவிடும்.

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

அக்கொடிய அழுக்காறு தோன்றினால், அதில் பற்று அதிகமாகி அயலார்க்குத் துன்பம் விளைவிக்கக்கூடிய செயலல்லாச் செயல்களைச் செய்யத் துணிவுபிறக்கும். பின்னர்த்தீவினை வசத்தால் தீச்செயல்களைச் செய்தே தீருவான். அதனால் இவனுக்குத் தீங்கு உண்டாவது நிச்சயம்.

"அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து"

இவற்றால் அழுக்காறு நீக்கிச் செய்வதே நல்லறமாம் என்பது விளங்கும்.

அவா—மெய், வாய், கண், மூக்கு, செவி என்றும் ஐம்பொறிகளும் தாம் வேண்டியவாறே விஷயங்களின் மேற்செல்ல விழைவது பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடுகளால் துன்பமுற்று வருகின்றமையின், அவற்றை உணர்ந்த ஒருவனுக்கு அத்துன்பத்தினின்றும் நீங்கவேண்டிய முயற்சியே இன்றியமையாதது. அங்ஙனமின்றி மீட்டும் விஷயங்களை விரும்பின் அதுவே பிறவிக்குவித்தாய் முடிவிலாத துன்பத்தை அளிக்கும்.

"அவா வென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பீனும் வித்து"

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக"

"அவாவில்லார்க் கில்லாகும் துன்பமஃ துண்டேல்
தவாது மேன்மேல் வரும்"

என்று வருகின்ற பெரியோர் வாக்குக்களால் அறஞ்செய விரும்புவோர் பெரிதும்—முற்றும் ஆசையை நீக்க வேண்டியவராகின்றார் என்பது பெறப்படுகின்றது. இதனால், அவாவின்றிச் செய்யப்படுவதே நல்லறமாம் என்பது விளங்கும்.

வெகுளி,—அயலார் அறியாமற் செய்த பிழைக்கும் அவரிடம் பகைமை கொள்ளுதலைக் குறிப்பது. அது, தன்னைக் காட்டிலும் வலிமை வாய்ந்தவரிடத்திலே தோன்றினால் இம்மையிலேயே அவரால் துன்பத்தை அடைதலாலும், சமானர்களிடத்திலே தோன்றினால் பலவழியாலும் வஞ்சனை முதலிய புரிந்து கெட்டவற்றையே எண்ணி நன்மனம் கெடுதலாலும், மெலியாரிடத்திலே தோன்றினால் இம்மையிற் பழியும், மறுமையில் நரகமும் அடைதலாலும்

"மறத்தல் வெகுளியை யாரமாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்"

"இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று"

என்றுள்ள அறவுரைகள் எழுந்தன. இங்கே,

"தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்"

என்ற நாலடிச் செய்யுளும் நினைக்கத் தக்கது. மேலும், வெகுளி தோன்றிய பொழுது ஜீவகோடிகளிடம் வைக்கவேண்டிய அருள் கெடும். அருளில்லாமல் அறம் இல்லையாதலின் வெகுளி நீங்கிய அறமே நல்லமாம் என்பது போதரும்.

இன்னாச் சொல்,—பிறர்க்குத் துன்பம் உண்டாக்கக் கூடியதும், செவிக்குப் பொருததும் ஆகிய கடுஞ்சொல். அது கோபம் உண்டாவதற்கு ஏதுவாவது; தம்மை ஒருவர் இகழின் அவரிடம் உடனே கோபம் உண்டாவது உலக இயற்கையாதலின் வெளியிற் சென்று தேடவேண்டாததும், தம்மிடத்திலேயே இருப்பதும் ஆகிய இனியவற்றைக் கூறி இன்பமுறாது கடுமையானவற்றைக் கூறுவதால் வரும் பயன் யாது? பழியே யன்றோ? ஆதலின், அதற்குள்ளாகாது,

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது"

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற"

என்றுள்ள ஆன்றோர் வாக்குக்களை உணர்ந்து, இம்மையில் உலகம் உவப்பதற் கேதுவாகிய இன் சொற்களையே சொல்லி இன்புற வேண்டியது ஒவ்வொருவரது கடமை யாகவும் இருக்கின்றது. இவற்றால் இன்சொலாலாகிய அறமே நல்லறமாம் என்பது தெளியும்.

இனி, இக்கூறிய அனைத்துள்ளும் மேலாக இங்கே ஒவ்வொருவராலும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறம்
ஆகுல நீர பிற"

என்ற திருக்குறட் கருத்து பெரிதும் ஊன்றியறியத் தக்கது.

இத்துணையுங் கூறியவாற்றால் ஜீவகோடிகள் பெறுதற்கரிய மக்கள் யாக்கையைப் பெறவேண்டியது இன்றியமையாத தொன்றென்பதும், அதுமிக அரிது என்பதும், அதனாற் பெறவேண்டியது வீடுபேறே என்பதும், அதனை அடைதற்கு உற்றவழி அறம் முதலிய மூன்றுமாம் என்பதும், அவற்றுள்ளும் அறம் ஒன்றிருப்பின் ஏனைய எளிதிற் சித்திக்கும் என்பதும், அந்த அறமும் அழுக்காறு முதலிய நான்கும் நீங்கிய இடத்தே பயன்படும் என்பதும், பிறவும் ஓராற்றான் விளக்கப்பட்டதாம்.

பிரம்மஸ்ரீ ஊ. சா. வேங்கடராமய்யர்,
தமிழ்பண்டிதர் ஹைஇஸ்கூல், கும்பகோணம்.

இரகஸ்யபுரி மர்மம்.

அத்தியாயம் 3.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-5, பக்கம் 120)

கள்வர் குகையில் அம்புஜவல்லி

முன்னால் நமது அம்புஜத்தைத் தூக்கிச் சென்றவர்கள் எங்கு சென்றார்கள்? அம்புஜத்தை யாது செய்தார்கள் என்று சற்றே கவனிப்போம்.

நவநீத கிருஷ்ண புரத்திற் கைந்து மைலுக்கப்பாலுள்ள நந்நகரம் என்னும் ஊரில் ஒரு வீட்டின் அறையில் நமது அம்புஜத்தைக் கொண்டு போய் வைத்திருந்தார்கள் அம்புஜம் அன்று பூராவாக மூர்ச்சையாயிருந்து விட்டாள். மறுநாட் காலையில் கண் விழித்தாள் சுற்று முற்றும் பார்த்தாள். தான் இன்ன இடத்தில் இருக்கிறோமென்று கண்டு கொள்ளக் கூடவில்லை பயம் அதிகரித்தது. அதிகரிக்கவே கதவைத் திறக்க முயன்றாள். கதவு நன்றாகப் பூட்டப் பட்டிருந்ததால் திறக்க முடியவில்லை. மிகவும் நடுங்கினாள் வருத்தம் ஜாஸ்தியாகி விட்டது. என்ன செய்வாள் சொல்ல முடியாத துக்கம் மேலிட்டது. "என் தந்தை எங்கிருக்கின்றனரோ? கூடிய சீக்கிரத்தில் என்னை மீட்பாரோ? ஜெகதீசா என்னை இக்கதிக்கா ஆளாக்கினாய்? இதற்காகவா நான் பூமியில் பிறந்தேன். என் சொந்தத் தந்தை யிருந்தால் நான் இவ்வாறு அவதிப்படும்படி விட்டு விடுவாரா? ஈசனே! சர்வேசனே! என்ன செய்வேன்? எவ்வாறுய்வேன் இக்கள்வர்கள் எதற்காக என்னை யெடுத்து வந்தார்கள்? இவர்கள் களவாட வந்தவர்களல்லர் என்று தோன்றுகின்றது. ஏனெனில் என்மேல் உள்ள ஆபரணங்கள் யாவும் கழற்றப்படாமல் அப்படியே யிருக்கின்றன. வேறு யாது காரணம் பற்றி என்னை யெடுத்து வந்தார்களோ? யானறிகிலேனே! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! அடியேனை யாட்கொள்ளுமீசா! நின்பாதமே சரணம் என்று இவ்விதமாகப் பிரலாபித்தாள்.

இக்கதியில் மிகவும் ஆஜானுபாகுவான கறிய நிறமுடைய ஒரு மனிதன் திடீரென உட்புகுந்தான். புகுந்தவன் பின்னால் யாரும் வாராமல் கதவை யிறுகத்தாளிட்டான். தனது அரையில் மாட்டியிருந்த பளபளப்பான கத்தியை யெடுத்துச் சரி பார்ப்பதுபோல் பார்த்தான். அம்புஜம் கத்தியைக் கண்டதே மிகவும் பயங் கொண்டாள். கோவென்று கதறினாள்.

"ஐயா! தாங்கள் யாராயிருப்பினும் எனது உயிருக்கு ஹானி நேராமல் தயவு செய்யவேண்டும். என்னுடைய ஆபரணங்களை எல்

ளைம் பெற்றுக்கொள்ளும் தயவுசெய்து நான் சொல்லுவதைக் கேளு மையாவென்று" கெஞ்சினுள் கண்ணினின்றும் தாரை தாரையாய் நீர் வடித்தாள். இதை யெல்லாம் பார்த்த மனிதன் நகைத்துப் "பெண்ணே! வருந்தாதே உன் உயிரை வாங்குவது என்னுடைய கருத்தல்ல. உன்னை இவ்விடம் கொணர்ந்ததின் காரணம் தெரியுமா? உன்னிடத்தில் சென்னை லம்பர் துரையவர்களுக்கு ஒரு லிகித மிருக்கிறதாமே. அது எங்களுக்கு அவசரமாகத் தேவையிருப்பதால் உன்னிடத்திலிருந்து பெறலாமென்று தான் உன்னை இங்கு வரவழைத்தது என்ன சொல்லுகிறு யிப்போது?

அம்புஜம்:—அரை பயம் அற்றுள் துயர் ஒருவாறு தணிந்தாள் சற்று மனந்தேறி "ஐயா! தாங்கள் சொல்வன யாவும் எனக்கு ஒரு கணவே போலிருக்கிறது. தாங்கள் குறிக்கும் லிகிதமானது எனக்கு மாத்திரம் உதவிக்காக என் தகப்பனுர் எழுதியது. அதை மற்றொருவருக்கும் லம்பர் துரையிடம் காண்பிக்கு முன் காண்பிக்கக் கூடாது என்று கண்டிப்பான உத்திரவிட்டிருக்கிறுர். ஆகையால் தாங்கள் கேட்கும் விஷயத்தில் யான் ஏதும் செய்யச் சக்தியற்றவள் இந்த அற்பக் காரியத்திற்காக என்னை இவ்வாறு தூக்கி வந்து வைத்திருப்பது அழகன்று. மேலும் நான் இன்னும் மணமாகாத பெண். தங்கள் கையில சிக்குண்டிருக்கிறேன். மானபங்க மேற்படுமேல், யான்தற்கொலை புரிந்து கொள்ளவும் சித்தமா யிருக்கிறேன் பிறகு தங்கள் யுக்தம்போல் செய்யுங்கள்.

மனிதன்:—ஹா! ஹா! பெண்ணே! சபாஷ்! என்னை யார் என்றும் நிதானித்து இவ்வாறு மொழிந்தாய். நீ மனதில் கொஞ்சமும் அச்சமில்லாமல் வார்த்தை யாடுகின்றுய். பார்த்தையா என் கையில் என்ன இருக்கிறது என்று இப்பொழுது நினைத்த மாத்திரத்தில் உன் உயிர் போய்விடும். வீணே ஸ்திரீஹத்தி தோஷத்தை ஏற்றுக்கொள்ள வேண்டமென்றே பொறுத்திருக்கிறேன். இப்பொழுதாவது சொல் அக்கடிதத்தை எங்கு வைத்திருக்கிறுய்? உள்ளதைச் சொல் இன்றேல் உன் உயிர் உன்னுடையதல்ல.

(தொடரும்)

P. N. Sankaranarayanayyar,
Son of
P. S. Narayanaswami Ayyar IA.v,
Pananjady.

ஏழைகளுக்கேற்ற அவிழ்தம்.

சர்வரோக நிவாரணி

அல்லது

வீரமாமுனிவர் சுகந்தரும் மாத்திரை.

இது எல்லா வகையிலும் குணமே செய்கின்ற நல்ல மருந்தென யாவரும் ஒப்புக்கொண்டு எங்கும் நன்மதிப் படைந்துள்ள பத்தியமில்லாத ஓர் பரம சஞ்சீவி.

இச்சுகந்தரும் மாத்திரை தேகதாருட்டியத்தையும், தாது பலத்தையும், வீரிய விருத்தியையும், இரத்த புஷ்டியையும் உண்டாக்கி இழந்துவிட்ட ஆண்மையை மெய்யாகவே மீண்டும் பெறுவிக்கும். இதை நம்பிக்கையாய் உபயோகித்து வந்தால் நீடித்த காலமுள்ள பாண்டு, கிராணி, க்ஷயம், நீரிழிவு, மேகம், வாதம், காக்கைவலி, குன்மம், சுரக்கட்டி முதலிய அநேக வியாதிகள் நிச்சயமாகவே நீங்கிக் குணமாவது பிரத்தியக்ஷம். ஸ்திரீகளுக்குண்டாகும் சூதக சம்பந்தமானஎல்லா வியாதிகளுக்கும் இதுவே கைகண்ட சித்த அவிழ்தம். குழந்தைகளின் பிணியைப்போக்கி அவர்கள் ஜீவனை இரக்ஷிக்கவும் அவர்களுக்குத் தேக புஷ்டியைத்தந்து வளர்க்கவும் இது தவறாத ஔஷதம். விசேஷமாயிது அனைவருக்கும் சடிதியாய் உண்டாகும் விஷக்காய்ச்சல்களையும் காலராவென்னும் கொள்ளை வியாதியையும், வாந்தி, அஜீர்ணம், பேதி, வயிற்றுவலி, அதிசாரம் முதலிய கொடியனவும் ஆபத்துள்ளனவுமான பல வியாதிகளையும் உட்கொண்ட உடனே அதிதீவிரமாயகற்றி ஆச்சரியத்தை விளைவிக்கும் அற்புத சக்திவாய்ந்த ஓர் அருமருந்து. இதைப் பரிக்ஷித்தவர்களுக்கே இதன் அருமை விளங்கும் இவ்வுண்மையை ஒருமுறை வாங்கிப் பரிக்ஷித்த எவரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது.

இவ்வுத்தம மாத்திரையானது மகா கீர்த்திப்பிரதாபம் பெற்ற ஐரோப்பிய பண்டிதரும் சத்தியவேத குரு முனிவருமான சங்கைக்குரிய இராஜரிஷி வீரமாமுனி சுவாமியவர்களால் லோகோபகாரமாய்த் தந்தருளப்பட்ட உண்மை ஔஷதம். இம்மகாமுனிவர் மானிடதத்துவங்களையும்தாது தாவரவர்க்கங்களின் இயற்கைக் குணங்களையும் ஐயந்திரிபறக் கற்று அநுபவமுதிர்ச்சி பெற்றவராகையால் இரத்தமே பிராணனுக் காதாரமென்னும் போதனானுசாரத்தைக் கடைப்பிடித்துச் சுத்தஇரத்தத்தைச் சுரப்பிக்கும் சேர்க்கைத் திரவியங்களான மூலதாதுக்களையும் அருமையாய்க் கிடைக்கக்கூடியவன மூலிகைகளின் சத்துக்களையும் கல்லுப்பு அயம் முதலிய மேலான ஔஷதங்களையும் கொண்டு இவ்வரிய யோக முறையை அருமையாய் முடித்து ஏழைகளுய்யுமாறு பரோபகாரமாய் வெளிப்படுத்தியருளினார். இது பாரம்பரிய வழியாய் செய்முறை தவறாது திருநெல்வேலி ஜில்லா மணப்பாடு வீரமாமுனிவர் ஔஷதசாலையில் சி. ம. சில்வெயிரா பண்டிதரவர்களால் சித்தஞ் செய்யப்பட்டு சர்க்காரில் உரிமைச் சுதந்தரம் பதிவாகி வெளிவந்து உலகெங்கும் பிரக்யாதி அடைந்து நாங்களிதனை மொத்த விற்பனைக்கென்று ஏராளமாய்த் தருவித்துச் சொற்ப விலைக்குக் கொடுத்து வருகிறோம். குறைந்த விலையை முன்னிட்டு மருந்தின் குணத்தைக் கேவலமாய் நினைக்கவேண்டாம். இதனால் யாதொரு திரவியலாபம் வேண்டாது தரித்திரர் முதல் தனிகர்வரையும் தாராளமாய் வாங்கி உபயோகித்து எல்லா வியாதிகளினின்றும் சுகம்பெற வேண்டுமென்பதே இதைச்செய்தவரின் முக்கிய கருத்தென்பதை ஆன்றோர் அறியக்கடவர்.

இதன் விலை 100-மாத்திரைகள் அடங்கிய பெட்டி	1-க்கு	1	0	0
,,	5-க்கு	4	6	0
,,	10-க்கு	7	8	0
,,	25-க்கு	16	0	0

தபால் செலவு முதலியன பிரத்தியேகம்.

210454

T. M. மாணிக்கம் பிள்ளை,

சுருட்டு வியாபாரம்,

60, பந்தர் தெருவு, சென்னை.

வீரமாமுனிவர் ஔஷதசாலை,

எட் ஆபீஸ், மணப்பாடு, திருநெல்வேலி, ஜில்லா.

Dharmaseelan Press, Madras.

பெஸ்ட் லீவர் கெடியாரம்.

8-வருஷம் உத்திரவரதம் கொடுக்கப்படும்.

இங்கிலீஷில் பெஸ்ட் லீவர் என்றால் இங்கிலீஷ் மேக்கரால் செய்யப்பட்டவை. இது வெள்ளியைப்போன்ற ஒயிட் மெடலில் புதிய சாமான்கள் சேர்த்து சக்கரங்களுக்கு வெகு காலம் உழைக்கும்படி கெம்புகள் பதிந்திருக்கின்றன. இது பார்வைக்கு வெகு சுந்தரமும் நடுத்தர அளவுள்ளதுமாயும் முன்புறம் விநாடி முள்ளும் தலை சாவியுமுள்ளது. முன் விலை 10 ரூபா தற்சமயம் அனைவரும் வாங்கும்பொருட்டு நிக்கல் செய்முடன் ரூ. 6 0 0

நெல்சன் வாச் கம்பெனி,
பாலகிருஷ்ணன் சந்து, ஜி. டி. சென்னை.

டாக்டர் பீட்டர் என்பவரால் நூதனமாம் கண்டு பிடிக்கப்பட்ட

சுகானந்த இரகசிய ரப்பர் பை.

இது அமெரிக்கா தேசத்தில் மிருதுவான ரப்பரால் தயார் செய்யப்பட்டது. இது ஸ்திரீ சம்பந்தமான (Veneral Diseases) மேக ரோகங்கள் அணுகாமல் சரீரத்தை ஜாக்கிரதையாக காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் அவசியம் வாங்கும்படியான ஓர் அதிசய கருவியை சுலபமான விலைக்கு விற்று வருகிறோம்.

டின்னுடன் 1-பை 1—4—0 2-பைக்கு வி. பி. சார்ஜ் இனாம்.

ஆதிலக்ஷ்மி கம்பெனி,
மண்ணடி போஸ்ட் மதராஸ்.

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகுசுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டியகாப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப்போம்.

மானேஜர்,

தருமசீலன் பிரஸ்,
2 பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

ஜிநபாரதம்.

இது, சமஸ்கிருதத்திலிருந்த ஜைன பாரதத்தைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டது. சைவ வைஷ்ணவ மதங்களைச் சார்ந்து இப்போது தமிழ் நாட்டில் உலவிவரும் பாரத சரித்திரங்களில் இயற்கைக்கு விரோதமாகப் பற்பல விஷயங்கள் காணப்படுவதால் பாண்டவர்களின் உண்மை சரித்திரத்தைக் காணமுடியாதிருக்கும் குறையை நிவர்த்திக்கக் கருதி ஜைனமதப் பெரியோரால் எழுதப்பட்ட உண்மையான கதை அடங்கிய பாரதமிது. இதனைப் படிப்பதால் நல்லறிவுண்டாவதோடு மற்றைய பாரதங்களுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்குணர்ந்து கொள்ளலாம். எல்லோருக்கும் உபயோகமான புத்தகமிது.

இதன் விலை அணா-6.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

கனவான்களே!

கலியாணத்தில் தாலிகட்டுவதைக் கூட மறந்து விடுவதுண்டா என்று சந்தேகப்படவேண்டாம். சில மௌட்டிகமான ஜனங்களிடத்தில் மெய்யாகவே இச்சம்பவம் நடந்திருக்கின்றது. அதை அனுசரித்தே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. இக்கதை முழுவதையும் படித்துப் பார்த்தால் தாலிகட்ட மறந்து விடுவதற் கேற்பட்ட காரணங்களும், இன்னும் பல விஷயங்களும் மிக வேடிக்கையாய் விடாநகப்பை யுண்டாக்கும். இப்புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் படித்தாலும் அடங்காச் சிரிப்பே யுண்டாகும். ஆனால், இதன்பெயர் வேடிக்கையா யிருப்பதை முன்னிட்டு மற்ற சாமானியர் எழுதுவதுபோல் இதில் உபயோகமற்ற விஷயங்களை ஆபாசத் தமிழில் எழுதப்பட்டிருக்குமென்று நினைக்கக்கூடாது. நல்ல தமிழில் ஜனங்களுக்குப் பற்பல நீதிகளை உபதேசிக்கக்கூடிய விஷயங்களை நாவல் ரூபமாக எழுதப்பட்டிருக்கின்றன. இது படிப்பதற்கு மிக வேடிக்கையாய் இருக்கிறது.

இதன் விலை அணா-5

தருமசீலன் பிரஸ்,

26. ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.